பத்திரிக்கை செய்தி

நில மதிப்பீட்டை குறைவாக காண்பித்து அரசுக்கு வரவேண்டிய வருவாயை இழப்பீடு செய்த காரணத்திற்காக அப்போதைய முன்னாள் களக்காடு பேரூராட்சி தலைவர், முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.31,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

முன்னாள் களக்காடு பேரூராட்சி தலைவர் திரு.பி.சி.ராஜன், (தற்போது களக்காடு நகராட்சி துணைத் தலைவர்) மற்றும் திரு.முத்துக்குமார், முன்னாள் களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்கள் 7.47 ஏக்கர் நிலத்தினை 165 வீட்டு மனை பிரிவுகளாக பிரித்து லேஅவுட் அனுமதி அனுமதி வழங்கியதன் மூலம் அரசுக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுத்தியதாகவும், வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டதில் வளர்சிக்கட்டணம் ரூ.17,56,227/- மற்றும் சென்டேஜ் கட்டணம் ரூ.49,500/- ஆகியவற்றை குறைவாக வசூலித்தன் மூலம் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாகவும், குறைவான சாலை பரப்பளவை ஒப்படைக்க அனுமதித்ததின் மூலம் ரூ.53,71,760/- இழப்பு ஏற்பட்டதாகவும், மேலும் அரசுக்கு ஒப்படைக்க வேண்டிய 10% பொதுப் பயன்பாட்டு நிலமான 74.7 சென்ட் பரப்பளவு நிலத்தை ஒப்படைக்காமல் அனுமதித்ததன் மூலம் ரூ.1,20,92,000/- இழப்பு ஏற்படுத்தியதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருநெல்வேலி பிரிவில் கடந்த 14.03.2016ல் தொடரப்பட்ட வழக்காகும். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 19.06.2026 திரு.பி.சி.ராஜன், முன்னாள் களக்காடு பேரூராட்சி தலைவர், (தற்போது களக்காடு நகராட்சி துணைத் தலைவர்), மற்றும் திரு.முத்துக்குமார், முன்னாள் களக்காடு பேரூராட்சி செயல் அலுவலர், ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மொத்தம் ரூ.31,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.